*7*

# புறஜாதியார், மனச்சாட்சி, மற்றும் ஊழியப்பணி

## (2:14, 15)

*ரோமர் முதல் அதிகாரத்தைப் பற்றிய நமது படிப்பில், புறஜாதியார் பாவிகளாக இருந்த நிலையில் அவர்களுக்கு தேவ நீதி தேவைப்பட்டது என்று பவுல் நிலைநாட்டுகையில், புறஜாதியாருக்கு எதிரான பவுலின் நிலைப்பாட்டை நாம் கண்டோம் (வசனங்கள் 18-32). 2ம் அதிகாரத்தில் இந்த அப்போஸ்தலர், யூதர்களும் குற்றப்பட்டவர்களாக எந்தவித சாக்குப்போக்கும் கூற முடியாத நிலையில் இருந்தனர் என்று காண்பித்தார் (வசனம் 1; வசனம் 17அ வைக் காணவும்). இருப்பினும், நாம் யூதர்களிடத்தில் நமது கவனத்தைத் திருப்புமுன்பு, புறஜாதியார் பற்றிப் பவுல் கூறியது என்ன என்பதைக் குறித்து அறிய இன்னும் ஒரு பாடத்தை அர்ப்பணிப்போம்.[1] இப்பாடம் 2:14, 15 என்ற குறுகிய வசனப்பகுதியின் மீது மையம் கொண்டுள்ளது.*

*இரண்டாம் அதிகாரம் யூதர்களின் ஆவிக்குரிய குறைவுகளைப் பற்றி முதன்மையாகக் கூறுகிறதென்றாலும், இதில் பவுல் அவ்வப்போது யூதரல்லாதவர்களைப் பற்றியும் குறிப்பிட்டார். உதாரணமாக, 9ம் வசனம், "முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் பொல்லாங்கு செய்கிற எந்த மனுஷ ஆத்துமாவுக்கும் உபத்திரவமும் வியாகுலமும் உண்டாகும் என்று கூறுகிறது." "கிரேக்கர்" என்பது "யூதரல்லாதவர்" என்பதற்குச் சமமானதாகவும், இறுதியில் "புறஜாதியார்" என்பதற்குச் சமமானதாகவும் உள்ளது.*

*மீண்டுமாகப், பவுல் "எவர்கள் நியாயப்பிரமாணமில்லாமல் பாவஞ் செய்கிறார்களோ, அவர்கள் நியாயப்பிரமாணமில்லாமல் கெட்டுப் போவார்கள் ..." என்று கூறினார் (2:12). மோசேயின் நியாயப்பிரமாணத்தைப் பெற்றிராதவர்களான புறஜாதியார்தாம் "நியாயப்பிரமாணமில்லாமல் பாவம் செய்தவர்களாக" இருந்தனர். இவர்கள், "நியாயப்பிரமாணமில்லாமலேயே கெட்டுப் போவார்கள்" என்று பவுல் கூறினார். இது நியாயமானதாக காணப்படவில்லை என்று சிலர் மறுப்புத் தெரிவிக்கலாம்: "அவர்கள் நியாயப்பிரமாணத்தைப் பெற்றிராத நிலையில் இருந்தால், அவர்கள் ஏன் கெட்டுப் போக வேண்டும்?" புறஜாதியார் ஒரு பிரமாணத்தைக் கொண்டிருந்தனர் என்பதே பவுலின் பதிலாக இருந்தது. அவர்கள் மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கொண்டிருந்ததில்லை,*

ஆனால் அவர்கள் ஒரு பிரமாணத்தைக் கொண்டிருந்தனர்:

> "அன்றியும் நியாயப்பிரமாணமில்லாத புறஜாதிகள் சுபாவமாய் நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறபோது, நியாயப்பிரமாணமில்லாத அவர்கள் தங்களுக்குத் தாங்களே நியாயப்பிரமாணமாயிருக்கிறார்கள். அவர்களுடைய மனச்சாட்சியுங்கூடச் சாட்சியிடுகிறதினாலும், குற்றமுண்டு குற்றமில்லையென்று அவர்களுடைய சிந்தனைகள் ஒன்றையொன்று தீர்க்கிறதினாலும், நியாயப்பிரமாணத்திற் கேற்ற கிரியை தங்கள் இருதயங்களில் எழுதியிருக்கிறதென்று காண்பிக்கிறார்கள் (வசனங்கள் 14, 15).

ஒரு எழுத்தாளர், "புறஜாதியார் மோசேயின் நியாயப்பிரமாணம் என்ற வட்டத்திற்கு வெளியில் இருப்பினும், உண்மையில், அவர்கள் நியாயப்பிரமாணம் என்ற வட்டத்திற்கு வெளியே இருப்பதில்லை" என்று கூறினார்.[2]




சில மொழிபெயர்ப்பாளர்கள் 14 மற்றும் 15ம் வசனங்களை, இவ்வசனங்கள், பிரதான சிந்தனையிலிருந்து விலகிச் செல்கின்றன என்று சுட்டிக் காண்பிப்பதற்காக அடைப்புக் குறிகளுக்குள் இட்டுள்ளனர் (NIV; KJV; NKJV; ASV; NCV). (இவ்விரு வசனங்களும் நீக்கப்பட்டாலும், எஞ்சிய வசனப்பகுதி இடறல் எதுவுமின்றி வாசிக்கப்படுவதாக இருக்கும்.) 2:14, 15 வசனங்கள் விலக்கம் என்று கருதப்பட்டாலும் இல்லையென்றாலும்,[3] இவ்வசனப்பகுதியைத் தனியாக இன்னமும் படிக்க முடியும்.

இந்தப் பாடத்திற்கு, நான் "புறஜாதியார், மனச்சாட்சி மற்றும் ஊழியப்பணி" என்று தலைப்பிட்டுள்ளேன். முதலாவது நாம் இவ்வசனப் பகுதியை ஆய்வு செய்து, தேவன் புறஜாதியாருடன் கொண்டுள்ள உறவைப்பற்றி ஆழ்ந்து சிந்திப்போம். பின்பு நாம் மனச்சாட்சியைப் பற்றிக் கலந்துரையாடுவோம். ஸ்டீவென் பரபாஸ் என்பவர் "ரோமர் 2:14, 15 வசனப்பகுதியானது, புதிய ஏற்பாட்டில் மனச்சாட்சி பற்றி மிக அதிகமாக ஒளியூட்டும் வசனப்பகுதியாகும்" என்று கூறினார்.[4] (ரோமருக்கு எழுதிய நிருபத்தில் ஏறத்தாழ ஒவ்வொரு பத்தியிலும் - பெரும்பாலும் பக்கச் சிந்தனையாக உள்ள - குறிப்பிடத்தக்க இறையியல் வசனப்பகுதி யொன்றை நாம் காண்கிறோம் என்பது இந்த நிருபத்தைப் படித்தலில் உள்ள அறைகூவல்களில் ஒன்றாகும்.) கடைசியாக, உலகத்திற்குச் சுவிசேஷ ஊழியம் செய்யும்படி இயேசு கொடுத்த கட்டளைக்கான நமது பதில்

செயலை 14 மற்றும் 15ம் வசனங்கள் பாதிக்க வேண்டுமா இல்லையா என்ற கேள்வியை நாம் ஆழ்ந்து சிந்திப்போம்.

## புறஜாதியார் பிரமாணம் ஒன்றைக் கொண்டிருந்தனர்

**"சுபாவமாய் நியாயப்பிரமாணத்தின்படி செய்தல்"**

வசனத்தை ஆராய்தல் மூலம் நாம் தொடங்குவோமாக. பவுல், "அன்றியும் நியாயப்பிரமாணமில்லாத[5] புறஜாதிகள் சுபாவமாய் நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறபோது" என்று தொடங்கினார் (வசனம் 14அ). முதலாம் அதிகாரத்தில் இந்த அப்போஸ்தலர், புறஜாதியார் உலகம் பற்றிய மங்கலான சித்தரிப்பை வரைந்தார். அதே வேளையில், "விதி விலக்குகள்" இருந்தன என்பது அவருக்கும் பிறருக்கும் தெளிவாய்ப் புரிந்துகொள்ளத் தக்கதாக இருந்திருக்கும். புறஜாதியார் ஒவ்வொருவரும் பாலியல் ஒழுக்கக்கேடு (1:24-27) அல்லது முற்றான அக்கிரமம் (வசனங்கள் 28-32) என்பவற்றினால் குற்றப்பட்டு இருந்ததில்லை. இவ்விதமாகப் பவுல் சில "புறஜாதியார் [மோசேயின்] நியாயப்பிரமாணத்தைக் கொண்டிராமல் இருப்பினும் [மோசேயின்] நியாயப்பிரமாணத்தில் இருக்கும் விஷயங்களை உள்ளுணர்வுடன் செய்கின்றனர்" என்று கூறினார்.

இங்கு விவாதிக்கப்பட்ட புறஜாதியார் மோசேயின் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்தனர் என்று அப்போஸ்தலர் கூறவில்லை; அவர்கள் அந்தப் பிரமாணத்தைக் கொண்டிராதபடியால் அவ்வாறு செய்ய இயலாமற் போயிற்று. இருந்தபோதிலும், அவர்கள் நியாயப்பிரமாணத்தின் *"விஷயங்களைச்"* செய்தனர். அதாவது, அவர்கள் மோசேயின் நியாயப்பிரமாணத்தினால் கட்டளையிடப்பட்ட *அதே வகையான* "விஷயங்களை" - *அதே* கொள்கைகளைப் பின்பற்றி - செய்தனர். எடுத்துக்காட்டாக, ஐந்தாவது கட்டளை, "உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக" என்று கூறிற்று (யாத்திராகமம் 20:12அ), புறஜாதியார் பலர் தங்கள் பெற்றோரைக் கனம் பண்ணினர். ஆறாவது கட்டளை, "கொலை செய்யாதிருப்பாயாக" என்று கூறிற்று (வசனம் 13), புறஜாதியாரில் பெரும்பான்மையானவர்கள் கொலை செய்வது தவறு என்று நம்பினர். ஏழாவது கட்டளை, "விபசாரம் செய்யாதிருப்பாயாக" என்று கூறிற்று (வசனம் 14), அவர்களில் சிலர் தங்கள் வாழ்க்கைத் துணைகளுக்கு உண்மையானவர்களாக நடந்தனர். எட்டாவது கட்டளை, "களவு செய்யாதிருப்பாயாக" என்று கூறிற்று (வசனம் 15), பெரும்பான்மையானவர்கள் களவு செய்வதைக் குற்றமாகக் கருதியிருப்பார்கள்.

புறஜாதியார் பத்துக் கட்டளைகளைப் பெற்றுக் கொண்டிருந்ததில்லை என்றால், அவர்கள் இந்தக் கொள்கைகளைப் பின்பற்றுவதை எவ்வாறு அறிந்தனர்? இவற்றை அவர்கள் "சுபாவமாய்" செய்தனர் என்று பவுல் கூறினார். "சுபாவமாய்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*phusei*) என்ற வார்த்தையானது, "இயல்பிலேயே" ("இயல்பு" என்பதற்கான *phu-*

*sis* என்ற வார்த்தையிலிருந்து இது வந்தது) என்ற நேரடி அர்த்தம் கொண்டுள்ளது. நியாயப்பிரமாணத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளவற்றை அவர்கள் "இயல்பாகவே" செய்தனர் என்பது நம்மில் சிலர் பயன்படுத்தும் சொற்றொடராக்கமாக இருக்கும். தாயெர் என்பவரின் அகராதியில் உள்ளபடி, ரோமர் 2:14ல் *phusei* என்பது, புறஜாதியார், "சரியானதும் தகுதியானதும் எது என்பதில் தங்கள் இயல்பான புலன் உணர்வினால் வழிநடத்தப்பட்டனர்" என்று அர்த்தமானது.[6]

1:26, 27ல் பயன்படுத்தப்பட்டுள்ள வகையில் "சுபாவம்" மற்றும் "சுபாவப்படி" என்ற வார்த்தைகளைப் பற்றிக் கலந்துரையாடியதில், நாம் "சுபாவம்" என்ற வார்த்தை "தேவனுடைய படைப்பு முறைமை" என்று அர்த்தம் தந்ததாக இரு எழுத்தாளர்கள் முடிவு செய்ததைக் கண்டோம். புறஜாதியார், சில விஷயங்கள் சரியானவைகளாகவும், மற்ற விஷயங்கள் தவறானவைகளாகவும் இருப்பதை "சுபாவப்படி" அறிந்தனர், ஏனென்றால் *தேவன் அவ்வாறாகவே மனிதர்களைப் படைத்தார்.*

**"நியாயப்பிரமணத்திற்கேற்ற கிரியை தங்கள் இருதயங்களில் எழுதி யிருக்கிறதென்று காண்பிக்கிறார்கள்"**

புறஜாதிகள் "சுபாவமாய் நியாயப்பிரமாணத்தின்படி" செய்தனர் என்பதைப் பற்றிப் பேசிய பின்பு (2:14அ), பவுல் "நியாயப்பிரமாண மில்லாத அவர்கள் தங்களுக்குத் தாங்களே நியாயப்பிரமாணமாயிருக் கிறார்கள்" என்று கூறினார் (வசனம் 14ஆ). சிலர், "தங்களுக்குத் தாங்களே நியாயப்பிரமாணமாக" இருக்கின்றனர் என்பது, அவர்கள் மனிதருடைய அல்லது தேவனுடைய நியாயப்பிரமாணத்தை ஒப்புக்கொள்வதில்லை, ஆனால் தங்களுடைய சொந்த இருதயங்கள் கட்டளையிடுவதையே பின்பற்றினர் என்று அர்த்தப்படுவதாகப் பேசுகிறோம். இப்படிப்பட்ட தனிநபர்களைப் பவுல் தமது சிந்தையில் கொண்டிருந்ததில்லை. அவர்கள் "தங்களுக்குத் தாங்களே நியாயப்பிரமாணமாயிருக்கிறார்கள்" என்று கூறியபின் விஷயம் *ஏன்* அவ்வாறு இருந்தது என்பதை அவர் விளக்கினார்: "நியாயப்பிரமாணத்திற்கேற்ற கிரியை தங்கள் இருதயங்களில் எழுதி யிருக்கிறதென்று காண்பிக்கிறார்கள்" (வசனம் 15ஆ).[7] இவ்விடத்தில் அப்போஸ்தலர், தேவனுடைய பிரமாணத்திற்கு எதிராகக் கலகம் செய் பவர்களைப் பற்றியல்ல, ஆனால் அதற்கு மாறாக, "நியாயப்பிரமாணத்தின் கிரியைகள் தங்கள் இருதயங்களில் எழுதப்பட்டிருந்தது" என்பதைத் தங்கள் வாழ்வினால் காண்பித்த (விளக்கப்படுத்திய) வர்களைப் பற்றி விவரித்தார்.

"நியாயப்பிரமாணத்திற்கேற்ற கிரியை" (வசனம் 15ஆ) என்பது அடிப்படையில், "நியாயப்பிரமாணத்தில் உள்ள விஷயங்கள்" என்றே அர்த்தப்படுகிறது. இந்தப் புறஜாதியாரின் இருதயங்களில், நியாயப்பிரமா ணமல்ல, ஆனால் "நியாயப்பிரமாணத்தின் *கிரியைகள்*" - அதாவது, மோசேயின் நியாயப்பிரமாணத்தில் கேட்டுக்கொள்ளப்பட்ட "கிரியைகள்" எழுதப்பட்டிருந்தன. NIV வேதாகமத்தில், "நியாயப்பிரமாணத்தில் விதிக்கப்பட்டவைகள் அவர்களின் இருதயங்களில் எழுதப்பட்டுள்ளன" என்றுள்ளது

"இருதயம்" (*kardia*) என்பது இவ்விடத்தில் (அடிக்கடி வேதாகமத்தில் உள்ளதுபோல) உள்ளான மனுஷனைக் குறிப்பிடுவதற்கு உருவகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது: "உணர்வு, தூண்டுதல், பிரியம், விருப்பம் ஆகியவற்றின் இருப்பிடம்" மேலும் "புத்திக்கூர்மையின் இருப்பிடம்" என்றும் கூறப்படலாம்.[8] "எழுதப்பட்டிருக்கிறது" (*graptos*, இது, "எழுத" என்று அர்த்தப்படுகிற *grapho* என்பதிலிருந்து வருவதாகும்) என்பதும், உருவகக் கருத்தில் - நாம் "தோல்வி அவன் முகத்தில் எழுதப்பட்டிருந்தது" என்று கூறும்போது உள்ள வகையில் - பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்விடத்தில், இது குறிப்பிட்ட (சில) ஒழுக்கரீதியான கடமைகள், காணப்படாத பேனாவினால் எழுதப்பட்டதுபோன்று அவர்களின் இருதயங்களில் நிலைபெற்றிருந்தன என்று அர்த்தப்படுகிறது.

நியாயப்பிரமாணத்தினால் விதிக்கப்பட்டவை புறஜாதியாரின் இருதயங்களில் எழுதப்பட்டிருந்தன என்று கூறியதில், பவுல் அனேகமாக, வேண்டுமென்றே செய்த நேர்மாறு ஒன்றை தரவழைத்திருக்கலாம்: யூதர்களின் பிரமாணம் *புறம்பே* (கற்பலகைகளில்; யாத்திராகமம் 24:12) எழுதப்பட்டிருந்தது என்றிருக்கையில், புறஜாதியாரின் பிரமாணம் *உள்ளே* (அவர்களுடைய இருதயங்களின் மீது) எழுதப்பட்டிருந்தது.

புறஜாதியார் நியாயப்பிரமாணத்தைப் பெற்றுக்கொள்ளாதிருந்தும், நியாயப்பிரமாணத்தில் கட்டளையிடப்பட்டவற்றில் பல விஷயங்களை "சுபாவமாய்" செய்ததன்மூலம், நியாயப்பிரமாணம் "தங்களின் இருதயங்களில் எழுதப்பட்டிருந்தது" என்பதைச் செயல்விளக்கப்படுத்தினர். இவ்வாறு அவர்கள் (பவுலின் சொற்றொடரைப் பயன்படுத்துவதென்றால்) "தங்களுக்குத்தாங்களே நியாயப்பிரமாணமாக" இருந்தனர்.

புறஜாதியார் ஒரு பிரமாணத்தைக் கொண்டிருந்தனர் என்று பவுல் உறுதிப்படுத்துகையில், அவர் - இருதயம், மனச்சாட்சி, மற்றும் சிந்தனைகள் என்ற - மூன்று விஷயங்களைக் குறிப்பிட்டார், மற்றும் அவை ஒவ்வொன்றுக்கும் ஒரு பணியைக் கொடுத்தார் (வசனம் 15). இருப்பினும், நாம் இருதயம், மனச்சாட்சி, மற்றும் சிந்திக்கும் திறன் ஆகிய இம்மூன்றும், தனித்தனியான, தனிக்குறிப்பான துறைகள் என்று நினைக்கக் கூடாது. இவை மூன்றும், தேவன் நமக்களித்த சிந்தைகளின் பணிகளாக இருக்கின்றன. (இவற்றை நாம் நமது "தன்னறிவின்" "மனச்சாட்சியின்" பணிகள் என்று நினைக்கலாம்.) இருதயம், மனச்சாட்சி, சிந்தனைகள் ஆகியவற்றைப் பட்டியலிடுவதில் உள்ளான மனுஷனைப் பிரித்துப்பகுத்தல் என்பது, பவுலின் நோக்கமாக இருக்கவில்லை. மாறாக, அவர் பகுத்தறிவுள்ளவர்கள் யாவரும், சில செயல்கள் சரியானவையென்றும் சில செயல்கள் தவறானவை என்றும் அறிய உதவும் உள்ளான செயல் முறையைப் பற்றி விவரித்தார்.

### "அவர்களுடைய மனச்சாட்சியும்கூடச் சாட்சியிடுகிறதினாலும்"

புறஜாதியாரில் சிலருடைய "இருதயங்களில் நியாயப்பிரமாணத்தின் கிரியை எழுதப்பட்டிருக்கிறது" என்று அறிவித்த பின்பு பவுல், "அவர்களுடைய

*மனச்சாட்சியும்கூடச் சாட்சியிடுகிறதினாலும்" என்று கூறினார் (2:15அ). மனச்சாட்சி என்று மொழிபெயர்க்கப்பட்ட (suneidesis என்ற) கிரேக்க வார்த்தை, "உடன்" (sun) என்ற முன்னிடைச் சொல்லுடன் "அறிதல்" என்று அர்த்தப்படும் (oida என்ற) வார்த்தை இணைந்துள்ள ஒரு கூட்டுச் சொல்லாகும். இதற்குரிய ஆங்கில வார்த்தையான "*conscience*" என்பது லத்தீன் மொழியில் இருந்து பெறப்பட்ட அதே அர்த்தம் கொண்டுள்ள வார்த்தையாகும்: "*con*" ("உடன்") கூடுதல் "*science*" ("அறிவு"). கிரேக்கமாயினும் ஆங்கிலமாயினும், இவ்வார்த்தை "*a knowing with [one self]"[9] என்பதைக் குறிப்பிடுகிறது. இது ஒரு "உள்ளான விழிப்புணர்வு" என்பதாக உள்ளது, ஆனால் இது எதைப் பற்றிய உள்ளான விழிப்புணர்வாக இருக்கிறது? (நமது நாட்களில் உள்ளது போன்றே) பவுலின் நாட்களில், சரியானது மற்றும் தவறானது என்ற உள்ளான விழிப்புணர்வைப் பற்றியதாக இருந்தன. Suneidesis என்பதை விளக்குவதில் ஒரு அகராதி, "ஒழுக்கரீதியான மனச்சாட்சி" என்ற சொற்றொடரைப் பயன்படுத்துகிறது.[10]*

*பிரென்டிஸ் மெடோர் என்பவர், தமது நாத்திக நண்பர் ஒருவருடன் ஒருமுறை மதிய உணவை உண்டுகொண்டிருந்தார். அந்த நண்பர், தேவனைத் தாம் நம்பாதிருப்பதற்குக் காரணங்களைப் பட்டியலிட்டுக்கொண்டிருக்கையில், சகோதரர் மெடோர், மேஜைக்குக் கீழ் இருந்த அம்மனிதரின் காலை உதைத்தார். அம்மனிதர் திகைப்படைந்தவராகக் கண்ணோக்கினார், ஆனால் அந்த செயலானது கவனக்குறைவினால் நடந்தது என்று முடிவுசெய்தவராக அவர் தமது சிந்தனையின் வரிசைக்குத் திரும்பினார். ஒருகணத்தில், பிரசங்கியார் அவரை மீண்டும் உதைத்தார். இவ்வாறு பலமுறைகள் நடந்த பின்பு, அம்மனிதர் நிறுத்தி, "நீங்கள் அதைச் செய்யக்கூடாது!" என்று கூறினார். சகோதரர் மெடோர், அவரைக் கண்களில் உற்றுப்பார்த்து, "நீங்கள் 'கூடாது' என்ற கருத்தை எங்கிருந்து பெற்றீர்கள்?" என்று கேட்டார். இந்த கதையைப் பற்றிக் கூறிய அவர், "ஒவ்வொரு நபரும் 'செய்யவேண்டும்' மற்றும் 'செய்யக்கூடாது' என்ற கருத்தைக் கொண்டுள்ளனர்" என்று முடித்தார்.[11]*

*மனச்சாட்சி பற்றி நாம் பிற்பாடு ஆழ்ந்து சிந்திப்போம். இந்தக் கணத்திற்கு, நான் ஒவ்வொரு நபரும், சில விஷயங்கள் "சரியானவை" மற்றும் சில விஷயங்கள் "தவறானவை" என்று உணரக்கூடிய உள்ளான உணர்வுடன் பிறந்திருக்கிறார் என்ற உண்மையை அடிக்கோடிட்டுக் காண்பிக்க விரும்புகிறேன். இவ்விதமாக, ஒரு நபர் எதைச் செய்தாலும், இந்த உள்ளான வழிகாட்டியானது, அந்தச் செயல் சரியானதா அல்லது தவறானதா என்பதற்கு அந்தத் தனிநபருக்குச் "சாட்சி கொடுக்கிறது."*

*உள்ளான இந்தக் கண்காணிப்பின் விளைவைப் பவுல் பின்வருமாறு விளக்கினார்: "குற்றமுண்டு குற்றமில்லையென்று அவர்களுடைய சிந்தனைகள் ஒன்றையொன்று தீர்க்கிறது" (வசனம் 15ஆ). ஒரு நபருடைய மனச்சாட்சி, அவர் குற்றம் செய்தார் என்று முடிவுசெய்தால், அவரது சிந்தனைகள் அவரை குற்றம் சாட்டும் (13:5ஐக் காணவும்). அதை நாம், "குற்றமுள்ள*

மனச்சாட்சியைக் கொண்டிருத்தல்'' என்று அழைக்கிறோம். தனிநபரின் மனச்சாட்சி, அவர் சரியானதைச் செய்தார் என்று முடிவுசெய்தால், அவரது சிந்தனைகள் அவரைத் தற்காக்கும் (9:1ஐக் காணவும்). அதை நாம் “நல்மனச்சாட்சியைக் கொண்டிருத்தல்'' என்று அழைக்கிறோம்.

ரோமர் 2:15ல் சட்டரீதியான சொற்றொடர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதை நீங்கள் கவனித்து இருக்கலாம்:[12] “பிரமாணம்,” “சாட்சியிடுதல்,” “குற்றப்படுத்துதல்,” “தற்காத்தல்.” இது நீதிமன்றத்தின் காட்சியமைவாக உள்ளது. NEB வேதாகமம், 15ம் வசனத்தின் இறுதிப்பகுதியைப் பின்வருமாறு தரவழைக்கிறது: ‘‘அவர்களின் மனச்சான்று சாட்சியாயிருக்க அழைக்கப்படுகிறது, மற்றும் அவர்களின் சுயமான சிந்தனைகளும் அவர்களுக்கு எதிராகவோ அல்லது அவர்களின் சார்பாகவோ வாதாடுகிறது.” இந்த நீதிமன்ற அறையில், மனச்சான்றானது நீதிபதியாக, சாட்சியாக மற்றும் மத்தியஸ்தராக செயல்படுகிறது - அது உடனடியான தீர்ப்பைத் தரவழைக்கிறது. பின்பு அது, தண்டனை நிறைவேற்றுபவராகச் செயல்பட்டு, நீதிமன்றத்தின் தண்டனையை நிறைவேற்றுகிறது. ஆல்ஃபிரெட் டென்னீஸென் என்பவர் பின்வருமாறு எழுதினார்,

> ... எப்பொழுதும் தனது மார்பில்
> ஒரு அமைதியான நீதிமன்றத்தைச் சுமக்கிறான்,
> தானே அதில் நீதிபதியாக, வழக்கறிஞராக, மற்றும் வழக்கு மன்றத்தில்
> தானே
> கைதியாக இருக்கிறான்.[13]

பவுல் மீண்டுமாக, மனிதகுலத்தின் உலகளாவிய குற்றத்தை நிலைநாட்டிக் கொண்டிருந்தார். எங்குமுள்ள மக்களெல்லாரும், வாழ்வதற்குச் சில ஒழுக்கத்தராதரத்தைக் கொண்டுள்ளனர். C. S. லூயிஸ் என்பவர், “பூமியெங்குமுள்ள மனிதர்கள் யாவரும், தாங்கள் ஒருசில குறிப்பிட்ட வழியில் நடந்துகொள்ள வேண்டியிருப்பதற்கான ஆர்வமான இக்கருத்துக்களைக் கொண்டுள்ளனர், அதைவிட்டு அவர்களால் விலகமுடிவதில்லை” என்று எழுதினார்.[14] சிலவேளைகளில் மக்கள் அந்தத் தர அளவையின்படி வாழ்கின்றனர், ஆனால் சிலவேளைகளில் அவர்கள் அதன்படி வாழ்வதில்லை. பிந்தியது விஷயமாயிருக்கும்போது, அவர்கள் சுயத்தினால் குற்றம் உணர்த்தப்பட்டுள்ளனர். பின்பு செயல்விளைவில், அவர்கள் இரட்சிப்பிற்கான தங்கள் தேவையை ஒப்புக்கொள்கின்றனர்.

### தொகுத்துரைத்தல்

தொடர்புடைய விஷயங்களுக்குக் கடந்து செல்லுமுன்பு, ஆண்டுகளினூடே புறஜாதியாருடன் தேவனுடைய உறவு பற்றி நாம் கற்றுள்ளவைகளை - மற்றும் பவுல், புறஜாதியாருக்கு இயேசுவின் தியாகபலி அவசியமாயிருந்தது என்று வலியுறுத்தியது ஏன் என்பது பற்றி - தொகுத்துரைப்போம். ரோமர் 1ல் பவுல், புறஜாதியாரைத் தேவன் எந்த வெளிப்படுத்துதலும் இன்றி விட்டுவிடவில்லை என்று வலியுறுத்தினார். அந்த அதிகாரத்தை நாம் படிக்கையில், யூதரல்லாதர்களுக்குத் தேவன்

*தம்மைப் பல்வேறு வழிகளில் வெளிப்படுத்தியிருந்தார் என்பதை நாம் கவனித்தோம். "முற்பிதாக்களின் பாரம்பரியம்" என்று நினைக்கப் படக்கூடியதான அந்த வெளிப்படுத்துதல், பலிகளைச் செலுத்துதலின் தேவையை உள்ளடக்கியிருந்தது. இருப்பினும், அந்த பாரம்பரியங்களின் நினைவு மங்கிப்போனாலும்கூட, படைக்கப்பட்டுள்ள உலகத்தில் புறஜாதியார் தெய்வீகத்துவத்திற்கான சாட்சியங்களை இன்னமும் கொண்டுள்ளனர் (1:18-20). இப்போது 2ம் அதிகாரத்தில் பவுல், யூதரல் லாதவர்களுக்குத் தேவன் மனச்சாட்சியைக் கொடுத்திருந்தபடியால், அவர்கள் மோசேயின் நியாயப்பிரமாணத்தின் ஒழுக்க நெறிகள் சிலவற்றை உள்ளுணர்வில் காத்தனர் என்பதைக் கூடுதலாகக் கூறினார். யூதப்பிரமாணமும் புறஜாதியார் கொண்டிருந்த பிரமாணமும் பின்வரும் வரைவட்டவணையில் உள்ளபடி ஒப்பிட்டு வேறுபடுத்தப்படலாம்.[15]*

*J. D. தாமஸ் என்பவர், "தேவனுக்கு முன்பாக எந்த மனிதரும் ஒருபோதும் பிரமாணம் ஒன்று இல்லாதிருந்ததில்லை!" என்று வலியுறுத்தினார்.[16] யூதர்கள் தங்களுக்குத் தரப்பட்டிருந்த பிரமாணத்தைப் பூரணமாகக் கடைப்பிடித்திருந்தால், அவர்களுக்கு இரட்சிப்பு தேவைப்பட்டிருக்காது. புறஜாதியார் தங்கள் பிரமாணத்திற்கு உண்மையுள்ளவர்களாக இருந்திருந்தால், அவர்களுக்காக இயேசு ஒரு சிலுவையில் மரிக்கத் தேவையிருந்திருக்காது. இவ்விருசாராருமே தேவன் தங்களுக்குக் கொடுத்திருந்த வெளிச்சத்தின்படி வாழவில்லை என்பதே, ரோமருக்கு எழுதிய நிருபத்தின் முதல் அதிகாரங்களில் பவுலின் விவாத மாக உள்ளது. ஆகையால் எல்லா மக்களுக்கும் - யூதர்களுக்கும் புறஜாதி யாருக்கும் - தேவனுடைய நீதி எப்போதுமே தேவைப்பட்டிருந்தது!*

## ஒவ்வொருவரும் மனச்சாட்சியைக் கொண்டுள்ளனர்

### *"மனச்சாட்சியில்லாத" மக்கள் யார்?*

*நாம் ரோமர் 2:14, 15ஐ விட்டுச் செல்வதற்கு முன்னர், மனச்சாட்சி பற்றிய சில குறிப்புகளை ஏற்படுத்த நான் விரும்புகிறேன். மனச்சாட்சி என்பதை விளக்கப்படுத்துவதில் விளக்கவுரையாளர்கள் சிரமம் கொண்டுள்ளனர், ஆனால் சராசரி நபர் ஒருவருக்கு அந்தப் பிரச்சனை இருப்பதில்லை. பெரும்பான்மையானவர்கள், "மனச்சாட்சி என்றால் என்ன என்று எனக்கு நிச்சயமாகவே தெரியும்! அது, நான் தவறு செய்கிறபோது எனக்குள்ளாக இருந்து என்னை மோசமாக உணரச்செய்கிற ஒன்றாக உள்ளது!" என்று கூறுவார்கள். நான் எதைப்பற்றிப் பேசுகிறேன் என்று நீங்கள் அநேகமாக அறிந்திருப்பீர்கள்.*

*ஒவ்வொரு நபரும், சில விஷயங்கள் "சரியானவை" மற்றும் சில விஷயங்கள் "தவறானவை" என்று உணரக்கூடிய உள்ளான உணர்வுடன் பிறந்திருக்கிறார்" என்று நான் ஏற்கனவே கருத்துத் தெரிவித்திருக்கிறேன். இருப்பினும், நீங்கள் மனச்சாட்சியின் உறுத்துதலினால் ஒருபோதும்*

பாதிக்கப்பட்டிராத சிலரை நீங்கள் அறிந்திருக்கலாம், அவர்கள் (எவரொருவரும் கூறக்கூடியபடி) ''மனச்சாட்சியில்லாதவர்களாக'' இருக்கின்றனர். வேறொரு இடத்தில் பவுல், தனிநபர் ஒருவர் தமது மனச்சாட்சி தனது பணியைச் செய்யாதிருக்கும்படி ''சூடுண்டு'' போகக்கூடும் என்பது பற்றி எழுதினார் (1 தீமோத்தேயு 4:1ஐக் காணவும்). ஒருவர் தமது மனச்சாட்சியின் குரலைத் தொடர்ந்து புறக்கணித்து, கடைசியில் அந்தக்குரல் அமைதிப்படுத்தப்படும் அளவுக்கு சூடுண்டுபோக முடியும். ரோமர் 14, 15 பற்றிய நமது படிப்பில், நாம் ஒருவர் தமது மனச்சாட்சியை ஒருபோதும் மீறக்கூடாது என்பது பற்றிக் காண்போம்.[17] ஒருநபர் தமது மனச்சாட்சிக்கு எதிராகச் செல்லும் ஒவ்வொரு முறையும், அவர் தமது மனச்சாட்சியைக் குறைவான செயல்விளைவுள்ளதாக்குகிறார். இதைத்தொடர்ந்து செய்வதால் அவர் தேவனால் தரப்பட்ட பாதுகாப்புக் கருவியை அழிக்கிறார்.

**"உங்கள் மனச்சாட்சி உங்களுக்கு வழிகாட்டியாக இருக்கலாமா?"**

மனச்சாட்சியின் தனித்தன்மை மற்றும் அதை மீறாதிருத்தலின் முக்கியத்துவம் ஆகியவற்றின் காரணமாக, ஒருவர் "தமது மனச்சாட்சியின் படி வாழ்வதே'' அவர் செய்யவேண்டிய அவசியமானது என்று சிலர் முடிவுசெய்கின்றனர். உலகின் சிலபகுதிகளில், ''உங்கள் மனச்சாட்சி உங்களுக்கு வழிகாட்டியாக இருக்கட்டும்'' என்பது அடிக்கடி கேட்கப்படக்கூடிய தத்துவமாக உள்ளது. நாம் நமது மனச்சாட்சியைத் தவறாகப் பயன்படுத்தக் கூடாதவர்களாயிருக்கிறோம் என்றுள்ள அதே வேளையில், மனச்சாட்சி என்பது தன்னில்தானே தவறற்ற வழிகாட்டியாக உள்ளது என்றும் நாம் முடிவுசெய்து விடக்கூடாது. பவுல் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தியபோது, அவர் அதைச் சுத்த மனச்சாட்சியுடன்தான் செய்தார் (நடபடிகள் 23:1ஆ; 26:9ஐக் காணவும்).

ஒழுக்கரீதியான மற்றும் மதம்சார்ந்த விஷயங்களில் மனச்சாட்சி மாத்திரம் போதுமான வழிகாட்டியாக இருப்பதில்லை, ஏனென்றால் அது தனக்குக் கிடைக்கிற *அறிவினால்* மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மனச்சாட்சியானது, சரியானதற்கும் தவறானதற்கும் இடையில் வேறுபாடு உள்ளது என்று ஒரு தனிநபருக்குக் கூறுகிறது; ஆனால் ஒருவருடைய மனச்சாட்சி சரியானது அல்லது தவறானது என்று நிர்ணயிக்கும் விஷயமானது, பெருமளவுக்கு அதற்குப் போதிக்கப்பட்டுள்ளவற்றைச் சார்ந்துள்ளது. மக்களில் பலர் விக்கிரகங்களை ஆராதிக்கின்றனர் அல்லது பலதார விவாகத்தை நடைமுறைப்படுத்துகின்றனர், ஆனால் அவர்கள் அவ்வாறே போதிக்கப்பட்டுள்ளபடியால் அவர்களின் மனச்சாட்சி அவர்களை அவ்விஷயங்கள் குறித்துக் கவலைப்படச் செய்வதில்லை.

முன்னதாக நான், மனச்சாட்சியை ஒரு நீதிபதி, சாட்சி, வழக்கறிஞர் மற்றும் தண்டனை அளிப்பவர் ஆகிய யாவும் ஒன்றிணைந்த விஷயத்திற்கு ஒப்பிட்டேன். சட்டங்களை ஏற்படுத்துதல் என்பது, ஒரு நீதிபதி, சாட்சி, வழக்கறிஞர் அல்லது தண்டனை அளிப்பவர் ஆகியோருடைய பணியல்ல, மாறாக, சட்டங்களை அமுல்படுத்துதல் என்பதே அவர்களின் நோக்கமாக உள்ளது. அவ்வாறே

மனச்சாட்சி என்பதும் சட்டம் இயற்றும் அமைப்பாக இராமல், சட்டத்தை நிறைவேற்றி செயல்படுத்தும் அமைப்பாகவே உள்ளது. அது தனக்குக் கிடைத்துள்ள ஆவிக்குரிய மற்றும் ஒழுக்கரீதியான சட்டங்களை அமுல்படுத்த மாத்திரமே முடியும். "மனச்சாட்சி என்பது பாதுகாப்பாக வழிநடத்தப்படும் வரைக்குமே அது ஒரு பாதுகாப்பான வழிகாட்டியாக உள்ளது" என்று கூறப்பட்டுள்ளது - அதாவது மனச்சாட்சியானது தேவனுடைய வசனத்தினால் பாதுகாப்பாக வழிநடத்தப்பட வேண்டும்.

**மனச்சாட்சியைக் குற்றமற்ற வகையில் பராமரித்தல்**

ஆளுநராயிருந்த பேலிக்ஸ் என்பவருக்கு முன்பாகப் பவுல் தற்காப்பு வாதம் செய்தபோது, அவர் (பவுல்), "... நான் தேவனுக்கும் மனுஷருக்கும் முன்பாக எப்பொழுதும் குற்றமற்ற மனச்சாட்சியை உடையவனாயிருக்கப் பிரயாசப்படுகிறேன்" என்று கூறினார் (நடபடிகள் 24:16). "பிரயாசப்படுகிறேன்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை, போட்டிகளுக்குத் தயார்செய்து கொள்வதற்கு விளையாட்டு வீரர்களால் செய்யப்படுகிற தீவிரமான பயிற்சியைக் குறிப்பிடக் கிரேக்கர்களால் பயன்படுத்தப்பட்டது. பவுல் நேர்ப்பொருளில், "நான் குற்றமற்ற மனச்சாட்சியை உடையவனாயிருக்க என்னைத்தானே *பயிற்சியில் ஈடுபடுத்துகிறேன்*" என்று கூறினார்.[18] தீவிரமான விளையாட்டுப் பயிற்சியின் கடுமையான பணி அட்டவணை, நீண்ட மணிகள் மற்றும் இளைப்படையச் செய்யும் பயிற்சி ஆகியவற்றை நினைத்துப் பாருங்கள். பவுல் "எப்பொழுதும் குற்றமற்ற மனச்சாட்சியை உடையவனாயிருக்கப் பிரயாசப்படுவதற்கு" *அவ்வகையான* முயற்சியை மேற்கொண்டார். இங்கு உங்கள் மனச்சாட்சி நல்ல நிலையில் பணியாற்றும் முறைமையில் நிலைத்திருக்கச் சில ஆலோசனைகள் தரப்படுகின்றன.

- தேவனுடைய வசனத்தைப் படிக்க மும்முரமாயிருங்கள்.
- பாவத்தைப் பற்றி (சரியானது எது மற்றும் தவறானது எது என்பது பற்றி) தீவிரமாய் இருங்கள்.
- பாவத்தைப் பற்றி வேதாகமம் கூறுவதை *ஏற்றுக்கொள்ள* மும்முரமாயிருங்கள்.
- உங்கள் மனச்சாட்சியை உற்றுக்கவனித்தல் பற்றித் தீவிரமாயிருங்கள்.
- உங்கள் மனச்சாட்சி நீங்கள் தவறு செய்துள்ளதாகக் கூறும்போது விஷயங்களைச் சரியாக்கிக் கொள்ளத் தீவிரமாயிருங்கள்.
- எல்லாவற்றிற்கும் மேலாக, "சுத்த மனச்சாட்சியை" கொண்டிருத்தல் பற்றித் தீவிரமாயிருங்கள். நீங்கள் தவறு செய்துள்ளதாக உங்கள் மனச்சாட்சி கூறும்போது, உங்கள் பாவங்களில் இருந்து மனந்திரும்பி சுத்திகரிப்பிற்காகக் கர்த்தரிடம் செல்லுங்கள் (எபிரெயர் 9:14; 10:22ஐக் காணவும்).

# எல்லா மக்களும் தேவையொன்றைக் கொண்டுள்ளனர்

**ஒரு கேள்வி**

ரோமர் 2:14, 15 தொடர்பாக நாம் இன்னுமொரு விஷயத்தைக் கையாள்வது அவசியமாக உள்ளது. நான் ஒரு பையனாக இருந்தபோது, முதியவர் ஒருவர், "சுவிசேஷத்தை ஒருக்காலும் கேள்விப்பட்டிராமல் மற்ற நாடுகளில் இருப்பவர்களைப் பற்றிய விஷயம் என்ன? அவர்கள் இயேசுவைப் பற்றிக் கற்றுக்கொள்ள வாய்ப்பற்ற நிலையில் இருந்தபோதும் அவர்கள் இழந்துபோகப்படுவார்களா?" என்று கேட்டதைக் கேள்விப் பட்டேன். சிலவேளைகளில் பின்வரும் உணர்வுரீதியான கருத்து விளக்கப்படுகிறது: "நிச்சயமாகவே, அவர்கள் அறிந்துள்ளபடி தங்களால் இயன்ற அளவுக்குச் சிறந்தவைகளைச் செய்தால், தேவன் அவர்களை[யும்] இரட்சிப்பார்!" அந்த முடிவைப் பின்பெலப்படுத்த அவ்வப்போது, ரோமர் 2:14, 15 வசனப்பகுதி பயன்படுத்தப்பட்டது. அவ்வகையான எண்ணப்போக்கானது, மக்களில் சிலரை, கடல்கடந்து ஊழியப்பணி செய்வது பற்றி அக்கறையற்று இருக்கக் காரணமாயிற்று.

நீங்களும் நானும் "தேவனாக விளையாட" தைரியம் கொள்ளக்கூடாது; நாமல்ல, தேவனே யார் இரட்சிக்கப்படுவார், யார் இரட்சிக்கப்படாது விடப்படுவார் என்று முடிவு செய்வார். மற்ற எல்லாவற்றிலும் போலவே, இவ்விஷயத்திலும், பூமியனைத்திற்கும் நியாயதிபதியானவர் சரியானதைச் செய்வார் (ஆதியாகமம் 18:25ஐக் காணவும்). அதே வேளையில், நாம் ரோமர் 2:14, 15 வசனப்பகுதியானது, இன்றைய நாட்களில் மக்கள் - "தாங்கள் அறிந்துள்ளவற்றைக் கொண்டு தங்களால் இயன்ற அளவுக்குச் சிறப்பாகச் செய்யும்" வரையில் - சுவிசேஷமின்றி இரட்சிக்கப்படக்கூடும் என்று போதிக்கிறதா என்று சட்டப்பூர்வமாகக் கலந்துரையாட முடியும். இவ்வசனப்பகுதி இதைப்போதிக்கிறதென்று நான் நம்பவில்லை. இந்த முடிவிற்கான எனது காரணங்களை நான் பகிர்ந்துகொள்ள அனுமதியுங்கள்.

**புதிய ஏற்பாட்டு முறைமையல்ல, பழைய ஏற்பாட்டு சூழ்நிலை**

முதலிடமாக, புதிய ஏற்பாட்டு முறைமையல்ல ஆனால் பழைய ஏற்பாட்டு சூழ்நிலையே, யூதர்கள் மற்றும் புறஜாதியாருக்கு இடையிலான பவுலின் நேர்மாறான ஒப்பீட்டிற்குப் பின்னணியாக உள்ளது. டக்ளஸ் மூ என்பவர், 1:18-3:20ல் பவுல், "கிறிஸ்துவுக்கு முந்திய காலகட்டத்தை" விவரித்தார் என்று கூறினார்.[19] கிறிஸ்து வருவதற்கு முன்பு, தேவன் (எழுதப்பட்ட நியாயப்பிரமாணத்தைக் கொண்டிராத) புறஜாதி களிடத்தில் செயல்பட்டதைக் காட்டிலும் மாறுபட்ட வகையில் (எழுதப்பட்ட நியாயப்பிரமாணத்தைக் கொண்டிருந்த) யூதர்களிடம் செயல்பட்டார். இருப்பினும், இயேசு, ...

> ... இருதிறத்தாரையும் [யூதர்களையும் புறஜாதியாரையும்] ஒன்றாக்கி, பகையாக நின்ற [நியாயப்பிரமாணம் என்னும்]

> *பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து, ... நியாயப்பிரமாணத்தை ... ஒழித்து ..., [யூதர் மற்றும் புறஜாதியார் என்ற] இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம்பண்ணி, ... சிலுவையினால் ... இருதிறத்தாரையும் ஒரே சரீரமாக [சபையாக; எபேசியர் 1:22, 23] தேவனுக்கு ஒப்புரவாக்கினார் (எபேசியர் 2:14-16).*

இப்போது, கர்த்தருக்குள், *"யூதனென்றுமில்லை கிரேக்கனென [புறஜாதியாரெ]ன்றுமில்லை,"* ஏனெனில் எல்லாரும் *"கிறிஸ்துவுக்குள் ஒன்றாயிருக்கிறோம்" (கலாத்தியர் 3:28).* இன்றைய நாட்களில் சிலர் (இயேசுவில் விசுவாசம் கொள்ளுதல் என்ற) ஒரு அடிப்படையில் இரட்சிக்கப்படுகிற வேளையில், மற்றவர்கள் (தங்களால் இயன்ற அளவுக்குச் சிறப்பானவைகளைச் செய்தல் என்ற) மாறுபட்ட ஒரு அடிப்படையில் இரட்சிக்கப்படுகின்றனர் என்று போதித்தலானது புதிய ஏற்பாட்டின் *"ஒரே விசுவாசம் [போதனை]"* என்ற கருத்திற்கு நேர்மாறானதாக இருக்கும் *(எபேசியர் 4:1-6).*

**இரட்சிப்பு அல்ல, நியாயத்தீர்ப்பு**

இரண்டாமிடமாக (மற்றும் மிகமுக்கியமாக), ரோமர் *2:14, 15*ல் (மற்றும் அதன் சந்தர்ப்பப்பொருளில்), "பவுல் இரட்சிப்பைப்பற்றியல்ல, ஆனால் நியாயத்தீர்ப்பைப் பற்றி எழுதுகிறார்."[20] அவர் சிலர் தாங்கள் பெற்றுக்கொண்ட வெளிச்சத்தின்படி வாழ்ந்திருந்தபடியால் இரட்சிக்கப்படுவார்கள் என்ற கருத்தை நிலைநாட்டிக்கொண்டிருக்கவில்லை. மாறாக, அவர் எவரொருவரும் தாம் உடைமையாகக் கொண்டுள்ள சத்தியத்திற்கு ஏற்றபடி வாழவில்லை, எனவே எல்லாரும் *இழந்துபோகப்பட்டிருந்தனர்* என்று வலியுறுத்தினார் (வசனம் 12ஐக் காணவும்). ரிச்சர்டு பேட்டி என்பவர் பின்வருமாறு எழுதினார்,

> சுவிசேஷத்தைக் கொண்டிராமல், உண்மையுள்ளவராகவும் தம்மால் இயன்ற அளவுக்குச் சிறந்தவற்றைச் செய்பவராகவும் உள்ள புறதெய்வ வணக்கத்தாருக்குப் பவுல் நம்பிக்கை எதையும் அளிக்கவில்லை. புறதெய்வ வணக்கத்தார் தமது உண்மைத்தன்மையில் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியவராக இருக்கிறார் என்று பவுல் கருதியிருந்தால், அது அவரது ஊழிய வைராக்கியத்தை அடிப் படையிலேயே வலிவற்றதாக ஆக்கியிருக்கும்.[21]

யூதராயிருந்தாலும் புறஜாதியாராயிருந்தாலும், மனிதகுலம் முழுவதுமே, கிறிஸ்து இல்லாத நிலையில் இழந்துபோகப்பட்டுள்ளது என்று பவுல் உறுதிப்படுத்தினார். *மக்கள் சுவிசேஷத்தைப் புறக்கணிப்பதால் இழந்துபோகப்படுகின்றனர்* என்பது பொதுவாக உள்ள தவறான கருத்தாகும். இல்லை, இல்லை, இல்லை. மக்கள் *பாவிகளாக இருப்பதாலேயே அவர்கள் இழந்துபோகப்படுகின்றனர்.* கிறிஸ் புல்லர்டு என்பவர் இந்தக்கருத்தைப் பற்றிப்போதித்தபோது, கொடிய விஷம்கொண்ட பாம்பு ஒன்றினால்

கடிபட்ட மனிதர் ஒருவரைப் பற்றிய கதையொன்றைக் கூறினார்.[22] நண்பர்கள் அந்த நபருக்கு [antivenin[23]] விஷமுறிவு ஊசியொன்றைப் போடுவதற்காக உடனடியாக மருத்துவ உதவி செய்யும்படி விரைந்தனர். இருப்பினும் அவ்வசதியுள்ள இடத்திற்கு அவர்களால் நேரத்தில் செல்ல இயலவில்லை, அந்த மனிதர் இறந்துபோனார். சகோதரர் புல்லர்டு, "அந்த மனிதர் ஊசிபோடப்படாததால் இறந்தாரா?" என்று கேட்கிறார். ஆம் என்பது இதற்குப்பதில் அளிக்கும் இயற்கையான சாய்வாக உள்ளது. பின்பு அவர், "இல்லை, *அவர் கொடியவிஷம் கொண்ட பாம்பினால் கடிக்கப்பட்டதாலேயே இறந்தார்!*" என்று பதில் அளிக்கிறார். அதுபோலவே, ஒரு தனிநபர் இழந்துபோகப்பட்டிருந்தால், அது அவரது தனிப்பட்ட பாவத்தினாலேயே அவ்வாறாகிறது.

மக்கள் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ள அல்லது புறக்கணிக்க முடிவதால் அவர்கள் இரட்சிக்கப்பட அல்லது இழந்துபோகப்படக் கூடும்படிக்குச் சுவிசேஷத்தைக் கொடுப்பதற்காக இயேசு இந்த பூமிக்கு வரவில்லை. இல்லை, அவர் சிலுவையில் மரிக்காதிருக்கும் வரையில் மனிதகுலம் *ஏற்கனவே இழந்துபோகப்பட்டிருந்ததால்* (லூக்கா 19:10) மற்றும் நம்பிக்கையற்றிருந்ததால் (எபேசியர் 2:12) அவர் வந்தார்! J. D. தாமஸ் என்பவர், இன்றைய நாட்களில் சிலர் சுவிசேஷத்தைக் கேள்விப்பட்டிராத நிலையில் இரட்சிக்கப்படுவார்கள் என்ற கருத்தைப் பற்றிப் பின்வருமாறு விளக்கம் அளித்தார்:

> இந்தக் கண்ணோட்டத்தின்மீது ... ஒவ்வொருவரும் அறியாமையில் வளர அனுமதித்தல் என்பதே முழு உலகத்தையும் இரட்சிக்க மிகச்சிறந்த வழியாக இருக்கும். வேதாகமத்தை எரித்துப்போடுங்கள் மற்றும் சுவிசேஷ செய்தியை எவரொருவரும் குறிப்பிட அனுமதிக்காதீர்கள், மற்றும் அறியாமையின் மூலமாக மனிதகுலம் முழுவதும் இரட்சிக்கப்படும்! இது அபத்தமான பைத்தியக்காரத்தன மானதாக உள்ளது, ஆனாலும் அது இன்னமும் தர்க்கப்பொருத்த மாகவே உள்ளது.[24]

தனிநபர் ஒருவர் சுவிசேஷத்தைக் கேள்விப்படும் வாய்ப்பைப் பெற்றிருந்தாலும் இல்லையென்றாலும் கிறிஸ்து இல்லாதநிலையில், அவர் தமது பாவத்தில் இழந்துபோகப்பட்டிருக்கிறார் என்ற வேதாகமரீதியான போதனையை நாம் மிகவும் பலமாக வலியுறுத்த இயலாது (எபேசியர் 2:1). இந்தப் பகுதியை நான், "எல்லா மக்களுக்கும் தேவை ஒன்றுள்ளது என்று தலைப்பிட்டேன். அது, கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கான தேவையாகவே உள்ளது! தேவன் ஒருவர் மாத்திரமே நியாயதிபதியாக இருக்கிறாரென்று நான் மீண்டும் கூறுகிறேன்; யார் இரட்சிக்கப்படுவார் மற்றும் யார் இழந்துபோகப்படுவார் என்பதைப் பற்றிய கடைசி முடிவை அவரே மேற்கொள்வார். அதே வேளையில், வேதவசனங்களை பொறுத்தமட்டில், எந்த ஒரு நபரும், சுவிசேஷத்தைக் கேள்விப்பட்டிராது மற்றும் அதற்குக் கீழ்ப்படியாது இருக்கையில், அவர் இரட்சிக்கப்பட்ட நிலையில் இருக்கிறார் என்று கருத நமக்கு எந்த உரிமையும் இல்லை (2 தெசலோனிக்கேயர் 1:8; 1 பேதுரு 4:17ஐக் காணவும்).

*ஆகையால், இழந்துபோகப்பட்டுள்ள மற்றும் இறந்துகொண்டிருக்கிற உலகத்திற்குச் சுவிசேஷ செய்தியை எடுத்துச் செல்லாதிருக்கச் சாக்குப்போக்குக் கூறுவதற்குப் பதிலாக, நாம் எங்குமுள்ள எல்லா மக்களுக்கும் இயேசுவின் வரலாற்றைப் பகிர்ந்து கொள்ளும் வழிகளைக் கண்ணோக்குவது அவசியமாக உள்ளது!*

## *முடிவுரை*

*நாம் ஒருவருடைய சிந்தனைகளைப் பற்றிப் படிக்கையில், நாம் ''ஒன்று அவரைக் குற்றம் சாட்டுகிறோம் அல்லது தற்காக்கிறோம்'' (ரோமர் 2:15), நீங்கள் பவுல் கூறுவதைப் புரிந்துகொண்டிருக்கலாம். உங்கள் மனச்சாட்சி, ''குற்றமுண்டு! குற்றமுண்டு!'' என்று கதறும் குரலை நீங்கள் சந்தேகத்திற்கு இடமின்றி ''கேட்டிருக்கலாம்.'' அதைப்பற்றித் தவறெதுவும் இல்லை. அது உங்கள் மனச்சாட்சி நல்ல முறையில் செயலாற்றுவதைக் காண்பிக்கிறது. இருப்பினும், உங்கள் ஆத்துமாவைக் குற்ற உணர்வு நிரப்பியிருக்கும்போது நீங்கள் என்ன செய்ய வேண்டும்?*

*குற்ற உணர்வை இயேசுவின் இரத்தத்தின் மூலமாக என்றென்றைக்குமாக நீக்கிப்போட வேண்டும் என்பதே வேதாகமரீதியான பதிலாக உள்ளது. ஏவுதல் பெற்ற எழுத்தாளர் ஒருவர், ''... கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்!'' என்று எழுதினார் (எபிரெயர் 9:14). ''துர்மனச்சாட்சி [குற்றம் சாட்டுதல்] நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாகவும், சுத்தஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாகவும்'' நாம் அவருக்குக் கீழ்ப்படியும்போது, நமது மனச்சாட்சிகள் சுத்திகரிக்கப்படுகின்றன (எபிரெயர் 10:22). ''சுத்தஜலத்தால் கழுவப்பட்ட சரீரம்'' என்பது ஞானஸ்நானத்திற்குக் குறிப்புரையாக உள்ளதென்று பல கல்வியாளர்கள் ஒப்புக்கொள்கின்றனர். பேதுரு, ஞானஸ்நானத்தை ''தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கை'' என்று குறிப்பிட்டபோது, அவர் மனச்சாட்சியைச் சுத்திகரித்தலையும் விசுவாசத்துடன் கீழ்ப்படிதலையும் ஒன்றாகப் பிணைத்தார் (1 பேதுரு 3:21).*

*சுத்திகரிக்கப்பட்ட மனச்சாட்சியின் ஆசீர்வாதத்தை நீங்கள் அறிந்திருந்தால், நீங்கள் இயேசுவின் பலியின்மீது உங்கள் நம்பிக்கையை வைத்து அவருக்கு உங்கள் வாழ்வை ஒப்புக்கொடுங்கள் - அதையும் இன்றே செய்யுங்கள்!*

## பிரசங்கியார்களுக்கும் போதகர்களுக்கும் குறிப்புகள்

*இந்தப்பாடத்தை முடிப்பதில், நான் இன்னும் ஞானஸ்நானம் பெற்றிராதவர்கள்மீது கவனத்தைக் குவித்தேன். நீங்கள் அநேகமாக, உங்கள் வேண்டுகோளில் கிறிஸ்தவர்களின் ஆவிக்குரிய தேவைகளை உள்ளடக்க*

*விரும்பலாம். பல கிறிஸ்தவர்களும்கூட குற்ற மனச்சாட்சியினால் உபத்திரவப்படுகின்றனர் - சிலர் மனந்திரும்ப விரும்பாததாலும் மற்றும் சிலர் தேவனுடைய ஆச்சரியமான மன்னிப்பு எவ்வாறு இருக்கும் என்று ஒருபோதும் புரிந்து உணராததாலும் அவ்வாறு உபத்திரவப்படுகின்றனர். நாம் வெளிச்சத்தில் நடக்க விரும்பினால், இயேசுவின் இரத்தம் நம்மை நமது பாவங்களில் இருந்து தொடர்ந்து சுத்திகரிக்கிறது (1 யோவான் 1:7; வசனம் 9ஐக் காணவும்).*

---

குறிப்புகள்

[1]*இந்த அணுகுமுறை,* J. D. Thomas, *Romans*, The Living Word series (Austin, Tex.: Sweet Publishing Co., 1965), 14-16 *என்ற புத்தகத்தில் இருந்து எடுக்கப்பட்டது.* [2]C. K. Barrett, *A Commentary on the Epistle to the Romans* (London: N.p., 1957); quoted in Leon Morris, *The Epistle to the Romans* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 125. [3]*கிரேக்க வசனத்தில் அடைப்புக்குறிகள் இல்லை.* [4]Steven Barabas, "Conscience," in *The Zondervan Pictorial Bible Dictionary,* ed. Merrill C. Tenney (Grand Rapids, Mich.: Regency Reference Library, Zondervan Publishing House, 1963), 180-81. [5]*கிரேக்க வசனத்தில், இந்த "நியாயப்பிரமாணம்" என்பதற்கு முன்பாக, (ஆங்கிலத்தில் உள்ள* "the" *என்ற) திட்டவட்டச் சுட்டுச்சொல் இருப்பதில்லை. ஆனால் அந்த வசனத்தின் முடிவில் வரும் "நியாயப்பிரமாணத்திற்கு" முன்பாக சுட்டுச்சொல் இருக்கிறது. இவ்விரண்டுமே மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் குறிக்கின்றன என்பதைச் சந்தர்ப்பப்பொருள் சுட்டிக்காண்பிக்கிறது.* [6]C. G. Wilke and Wilibald Grimm, *A Greek-English Lexicon of the New Testament*, trans, and rev. Joseph Henry Thayer (Edinburgh: T. & T. Clark, 1901; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1977), 660. [7]*வார்த்தைகளில் உள்ள ஒன்றுபோன்ற தன்மையினால், ரோமர் 2:14, 15 வசனமானது எரேமியா 31:31-34ல் உள்ள கர்த்தரின் வாக்குத்தத்தத்தினுடைய நிறைவேற்றம் என்று சிலர் முடிவுசெய்கின்றனர். இவற்றில் சில வார்த்தைகள் ஒன்றுபோன்றுள்ளன, ஆனால் பவுல், பழைய உடன்படிக்கையின் (ஏற்பாட்டின்) காலத்தின்போது, புறஜாதியாருடைய "இயல்பான பிரமாணத்தை" தமது சிந்தையில் கொண்டிருந்த வேளையில், எரேமியா கிறிஸ்தவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்ட "புதிய உடன்படிக்கையை" - இயேசு கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டைக் குறிப்பிட்டார் (எபிரெயர் 8:7-13ஐக் காணவும்).* [8]*The Analytical Greek Lexicon* (London: Samuel Bagster & Sons, 1971), 213. [9]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 122. [10]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature*, 2d ed., rev. William F. Arndt and F. Wilbur Gingrich (Chicago: University of Chicago Press, 1957), 794.

[11]Prentice Meador, Jr., untitled sermon preached at Prestoncrest church of Christ, Dallas, Texas, n.d., cassette. [12]Morris, 128. [13]Alfred Tennyson, "Sea Dreams," *The Works of Tennyson*, ed. Hallam Tennyson (New York: Macmillan Co., 1923), 155. Tennyson (1809-1892) was the preeminent English poet of his time. [14]Quoted in Bruce Barton, David Veerman, and Neil Wilson, *Romans*, Life Application Bible Commentary (Wheaton, Ill.: Tyndale House Publishers, 1992), 51. [15]*இந்த விவரிப்பிற்கான எனது கருத்து* Thomas, 14-15 *என்ற புத்தகத்தில் இருந்து வந்தது.* [16]Ibid., 14. [17]*"மனச்சாட்சி" என்ற வார்த்தை ரோமர் 14,*

*15ல் காணப்படுவதில்லை, ஆனால் பவுல் கூறியவற்றில் பெரும்பகுதியின் கருத்து அவற்றில் இருதயமாக உள்ளது (14:14, 23ஐக் காணவும்).* [18]*The Interlinear Greek-English New Testament: The Nestle Greek Text with a New Literal English Translation by Alfred Marshall* (London: Samuel Bagster & Sons, 1958), 580. [19]Douglas J. Moo, *Romans*, The NIV Application Commentary (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 2000), 126. [20]John R. W. Stott, *The Message of Romans: God's Good News for the World,* The Bible Speaks Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1994), 86.

[21]Richard A. Batey, *The Letter of Paul to the Romans*, The Living Word Commentary (Austin, Tex.: R. B. Sweet Co., 1969), 38. [22]Chris Bullard, "A Universe in Reverse," sermon preached at Overland Park church of Christ, Overland, Kansas, 10 February 1991, cassette. [23]"Antivenin" *என்பது "விஷமுறிவு" என்று அர்த்தப்படுகிறது.* [24]Thomas, 15.

| யூதத்துவப் பிரமாணம் | உறவுமுறை | புறஜாதியாரின் "பிரமாணம்" |
|---|---|---|
| சடங்காச்சாரச் பிரமாணம்<br>பலிகள் ஆராதனை | தேவனுக்கு | முற்பிதாக்களின் பாரம்பரியம்<br>பலிகள் |
| ஒழுக்க நெறிமுறைகள்<br>குடிமைச் சட்டங்கள் | மற்றவர்களுக்கு | ஒழுக்க நெறிமுறைகள்<br>சரி&தவறு பற்றிய<br>உணர்வு |
| தனிப்பட்ட<br>கட்டுப்பாடுகள்<br>மனச்சாட்சி | சுயத்திற்கு | சுய கட்டுப்பாடுகள்<br>மனச்சாட்சி |